பண்பாட்டலுவல்கள் அலகு சுற்றுநிருபம் : 2024/06

எனது இல : NP/03/09/CMA/16
பண்பாட்டலுவல்கள் அலகு
நல்லூர/ யாழ்ப்பாணம்.
12.01.2024.

மாவட்ட செயலாளர் / பிரதேச செயலாளர்,
மாவட்ட செயலகம் / பிரதேச செயலகம்

............................................

## பண்பாட்டு அபிவிருத்தி செயற்திட்டம் - 2024

பண்பாட்டு அபிவிருத்தி செயற்திட்டமானது பின்வரும் நிகழ்ச்சித்திட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்துவதற்காக குறிப்பிட்டுள்ள செயற்பாட்டு விதிகளின் அடிப்படையில் குறித்த செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும்.

| நிகழ்ச்சித்திட்ட இலக்கம் | திட்ட நடவடிக்கை | கால எல்லை | ஒதுக்கீடு |
|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டம் - 01 | பிரதேச பண்பாட்டு விழா/ பிரதேசம் சார்ந்த வெளியீடு | யூலை 31 இற்கு முன் | 100,000.00 |
| | மாவட்ட பண்பாட்டு விழா<br>யாழ் மாவட்டம் - 200,000/=<br>ஏனைய மாவட்டம் - 4×150,000/= | ஆகஸ்ட் 31 இற்கு முன்னர் | 150,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் - 02 | பிரதேசகலைஞர் ஒன்றுகூடலும் ஆற்றுகையும் | ஏப்பிரல் 30 இற்கு முன்னர் | 15,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் - 03 | i.கலைஞர் ஊக்குவிப்பு/ii.கலைமன்றங்களின் அபிவிருத்தி/ iii.சமூக விழிப்புணர்வு செயற்திட்டங்கள் (பிரதேசம்) | ஏப்ரல் 30 இற்கு முன்னர் | 20,000.00 |
| நிகழ்ச்சித்திட்டம் - 04 | திருக்குறள் - பிரதேசம் | செப்ரெம்பர் 31 இற்கு முன்னர் | 20,000.00 |

பண்பாட்டு செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது பின்வரும் செயற்பாட்டு விதிமுறைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 01. பண்பாட்டு விழா (மாவட்டம், பிரதேசம்)

1. விழா பிரதேச கலை இலக்கிய பண்பாடுகளை பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டும்.

2. விழா கிராமங்களில் நடத்துவது சிறந்தது.
3. விழாக்களின் நேரமுகாமைத்துவம், திட்டமிடலிலும், செயற்படுத்தலிலும் கவனம் எடுத்தல் வேண்டும்.
4. விருதுகள் துறைசார்ந்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.
5. கலை, இலக்கியத்துறை அல்லாதவர்களுக்கு பண்பாட்டு விழாவில் வைத்து விருது வழங்கமுடியாது.
6. விழாவில் பிரதேச கலைஞர்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தல் வேண்டும்.
7. மூத்த கலைஞர் ஒருவரை விருந்தினராக கட்டாயம் அழைத்தல் வேண்டும்.
8. பிரதேச பண்பாட்டு விழாவுக்கு பிரதேச கலைமன்றங்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.
9. பண்பாட்டு விழா திணைக்களத்தின் பெயரை உள்வாங்கியே நடத்தப்படல் வேண்டும்
10. பண்பாட்டு விழா தொடர்பான செயற்பாட்டு அறிக்கை விழாவின் பின்னர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
11. பண்பாட்டு விழா தொடர்பான புகைப்பட ஆவணமாக்கல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
12. விருது வழங்கல் நிகழ்வானது மாவட்ட ரீதியாக மாத்திரமே இடம்பெறவேண்டும்.
13. விருது பெறும் கலைஞர்களின் விபரங்கள் ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.
14. மாவட்ட பண்பாட்டு விழா ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் பிரதேச பண்பாட்டு விழா யூலை மாதத்திற்கு முன்னரும் நடத்தப்படல் வேண்டும்.
15. பிரதேச பண்பாட்டு விழாவுக்கான திகதி தீர்மானிக்கப்பட்டதும், பிரதிப்பணிப்பாளரிடம் எழுத்து மூலம் முன் அனுமதி பெறப்படுவதுடன் விழாவுக்கான திகதியில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மீண்டும் பிரதிப் பணிப்பாளருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்த வேண்டும். விழாவுக்கான அழைப்பிதழ் முன்கூட்டியே திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
16. எமது திணைக்கள சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளுக்கே பிரதேச, மாவட்ட மட்டங்களிலும் விருது வழங்கப்பட வேண்டும். அவை தவிர்ந்து வேறு துறைகளுக்கு விருது வழங்குவதாயின் முறையான காரணத்தினை எழுத்து மூலம் பிரதிப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்து முன் அனுமதி பெறல் வேண்டும்.
17. திருக்குறள் போட்டி பரிசில்கள் பிரதேச பண்பாட்டு விழாவில் வைத்து வழங்கப்படல் வேண்டும்
18. ஒவ்வொரு ஆண்டு நிதியிலும் அந்த ஆண்டுக்குரிய பண்பாட்டு விழாவே நடத்தப்படல் வேண்டும்.

விருது வழங்கப்படவுள்ள துறைகள்

1. சிறுகதை
2. நாவல்
3. நாடகம்
4. நாடக எழுத்துரு
5. கவிதை.·. பேச்சு
6. நடனம்
7. ஓவியம்
8. சிற்பம்
9. குறும்படத்துறை
10. இசைநாடகம்

11. இசைக்கலை (சாஸ்திரிய இசை, பண்ணிசை, ஆக்க இசை)
12. வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம் போன்றன)
13. வாத்தியக்கருவிகள் உருவாக்கம் (தவில்,நாதஸ்வரம்,மிருதங்கம்,உடுக்கு, பறை போன்றன.)
14. கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடைக்கூத்து, மன்னார்ப்பாங்கு, முல்லைமோடி)
15. கிராமியக்கலைகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்)
16. இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை, இசையமைப்பு)
17. ஒப்பனைக்கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடனக் கலைத்துறைகளுக்கானவை)

அல்லது

பிரதேசம் சார்ந்த வெளியீடு – பிரதேசம்

1. பிரதேசம் சார்ந்த மலர் வெளியீட்டினை மேற்கொள்ளலாம்
2. பிரதேசம் சார்ந்த ஆவணப்படுத்தல் முயற்சியினை நூலுருவாக மேற்கொள்ளலாம்.
3. பிரதேசம் சார்ந்த கலை இலக்கிய செயற்பாடுகளை இலத்திரனியல் முறையிலும் வெளியிட்டுக் கொள்ளலாம்.
4. வெளியீடுகளில் நிதி அனுசரணை பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
5. வெளியீடுகள் பிரதேசத்தின் அடையாளங்களை முன்நிறுத்துவதோடு பிரதேச பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும்

## 2. பிரதேச கலைஞர் ஒன்றுகூடலும் ஆற்றுகை நிகழ்வும் - பிரதேசம்

1. கலைஞர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வினை மேற்கொள்ளுதல்
2. ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள கிராம மட்ட கலைஞர்களை இரண்டு அல்லது மூன்று குழுக்களாக பிரித்து ஒன்று கூடல் நிகழ்வினை மேற்கொள்ளலாம்.
3. கலந்துரையாடல் நிகழ்வின் அவர்களின் அனுபவப்பகிர்வு முக்கியமானதாகும்.
4. கலைஞர்களின் ஆற்றுகை நிகழ்வும் மேற்கொள்ளப்படலாம்.
5. இச்செயலமர்வினை கிராமங்களில் நடத்துதல் விரும்பத்தக்கது.
6. இச்செயலமர்விற்கு மாவட்ட கலாசார உத்தியோகத்தரையும் அழைத்துக் கொள்ளலாம்
7. நிகழ்வின் நிறைவில் செயற்பாட்டு அறிக்கை திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
8. நிகழ்வு தொடர்பான புகைப்பட ஆவணமாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 3. கலைஞர் ஊக்குவிப்பு –/கலைமன்றங்களின் அபிவிருத்தி/சமூக விழிப்புணர்வு செயற் திட்டங்கள் (பிரதேசம்)

### (i) கலைஞர் ஊக்குவிப்பு

1. பிரதேசம் சார்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புக்களை ஊக்குவிப்பதற்காக இந்த நிதி வழங்கப்பட வேண்டும்
2. படைப்புக்கள் நூல்வெளியீடாகவோ அல்லது இலத்திரனியல் வெளியீடுகளாகவோ இருக்கலாம்.

3. தரமான படைப்புக்களுக்கே வழங்கப்பட வேண்டும்.
4. குறித்த படைப்பினை துறைசார்ந்த வல்லுநர்களிடம் சமர்ப்பித்து தர மதிப்பீடு செய்து அங்கீகாரம் பெற்ற பின்னரே ஊக்குவிப்பு நிதியினை வழங்கலாம்.
5. வறிய கலைஞர், எழுத்தாளருக்கே குறித்த நிதி வழங்கமுடியும்.
6. ஒருவருக்கு ஒருதடவை மாத்திரம் வழங்கமுடியும்.
7. ஒருவருக்கு ஒரு தடவை வழங்கிய பின்னர் நான்கு வருடங்களின் பின்னரேயே அவருக்கு மீண்டும் வழங்க முடியும்.
8. பிரதேசத்தில் எழுத்தாளர், கலைஞர்கள் அவர்களது படைப்புக்களை வெளியிட இல்லையாயின் குறித்த நிதியினை திணைக்களத்திற்கு திருப்பி அனுப்புதல் வேண்டும்.
9. கலைப்படைப்பின் பிரதி பண்பாட்டு அலகிற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
10. செயற்திட்டம் தொடர்பான செயற்பாட்டு அறிக்கையும் புகைப்பட ஆவணமாக்கலும் பண்பாட்டலுவல்கள் அலகிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அல்லது

3 (II) கலைமன்றங்களின் அபிவிருத்தி – பிரதேசம்

1. கலைமன்றங்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்
2. குறித்த கலைமன்றத்தின் ஊடாக பண்பாட்டு விழுமியங்களின் வளர்ச்சியை மேம்படுத்துதல்
3. கலைநிகழ்வுகளை கிராம மட்டத்தில் நடத்துதல்
4. கலைமன்ற செயற்பாட்டுக்கான செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தல்
5. செயற்பாட்டுக்கான புகைப்பட ஆவணமாக்கல் மேற்கொள்ளல்
6. பெயர்ப்பலகை இல்லாத கலைமன்றங்களுக்குப் பெயர்ப்பலகை வழங்குதல்.

அல்லது

03 (III) சமூக விழிப்புணர்வு செயற்திட்டங்கள்

1. பிரதேச செயலக பிரிவில் ஏதாவது ஒரு பிரதேசத்தினை தெரிவுசெய்து பாடசாலைகள்/ ஆலயங்கள்/ பொது இடங்களில் சமூக சீர்திருத்தம் தொடர்பான விழிப்புணர்வு கூட்டங்கள், ஆன்மீக சொற்பொழிவுகள், தெருக்கூத்து, நாடகங்களை நடாத்துதல்.
2. தற்பொழுது உருப்பெற்று வரும் முக்கியமான சமூக பிரச்சினைகளான அதிகரித்து வரும் மது போதைவஸ்து பாவனை மற்றும் இளவயதுத் திருமணம் அதனால் ஏற்படும் குடும்ப வன்முறைகள், இளம் சமுதாயம் எதிர்நோக்கும் சவால்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்ட விழிப்புணர்வு செயற்திட்டங்களாக அமைதல் வேண்டும்
3. விழிப்புணர்வு செயற்பாடுகளுக்கான புகைப்பட ஆவணமாக்கல் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

04 திருக்குறள் - பிரதேசம்

1. கலைமன்றங்களுக்கிடையில் திருக்குறள் தொடர்பான போட்டிகள் கட்டாயம் நடத்தப்படல் வேண்டும்.
2. திருக்குறள் தொடர்பான அறிவினை மாணவர்களிற்கிடையில் சென்றடைய கூடிய வகையிலான செயற்திட்டமாக அமைதல் வேண்டும்
3. போட்டிகள் தொடர்பான செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. விழா தொடர்பான புகைப்பட ஆவணமாக்கல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

நிதிநிலைச் செயற்பாடு

1. பண்பாட்டு அபிவிருத்தி செயற்றிட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்துவதற்கான கால எல்லை குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்ட பின்னரே குறித்த திட்டத்திற்கான நிதி விடுவிக்கப்படும்.
2. விடுவிக்கப்படும் நிதிகள் அனைத்தும் முற்பணமாகவே விடுவிக்கப்படும்
3. விழாக்களுக்கான நிதிக்கோரிக்கை முன்வைக்கப்படும் போது விழாக்களுக்கான திகதி உறுதி செய்யப்பட்டு இரு வாரத்திற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
4. நிதி விடுவிக்கப்பட்ட திகதியில் இருந்து பதினைந்து நாட்களுக்குள் விடுவிக்கப்பட்ட நிதிக்கான நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் முற்பணம் தீர்வு செய்யப்படல் வேண்டும்.
5. சகல செயற்திட்டங்களுக்குமான நிதிகள் அனைத்தும் செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் முடிவுறுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
6. செயற்திட்டத்தின் நிறைவில் செயற்பாட்டு அறிக்கை, நிதிநிலை அறிக்கை ஆகிய இரண்டும் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
7. பண்பாட்டு செயற்திட்டங்கள் அனைத்தும் குறித்த காலப்பகுதிக்கு முன்னர் முடிவுறுத்தப்படல் வேண்டும் அதன் பின்னர் எந்தவொரு திட்டத்திற்கும் நிதி விடுவிக்கப்படமாட்டாது.

குறிப்பு :

1. பண்பாட்டு செயற்திட்ட நடவடிக்கைகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பத்தில் அந்நிதி திணைக்களத்தினால் மீள பெறப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.
2. செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக எதுவித நிதியும் வழங்கப்பட மாட்டாது.
3. நிதிக்கோரிக்கையினை முன்வைக்கும் போது ஒவ்வொரு செயற்திட்டமும் முடிவடைந்து முற்பணம் சீராக்கப்பட்ட பின்னரே அடுத்த செயற்திட்டத்திற்கான நிதி வழங்கப்படும். (எதிர்காலத்தில் கணக்காய்வு ஐயவினாக்கள் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக)
4. ஒழுங்கமைக்கப்படும் கலை நிகழ்வுகள் யாவும் பண்பாட்டினை பிரதிபலிக்கும் வகையில் பாரம்பரியத்துடன் கூடியதாக ஒழுங்கமைக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதுடன் நிகழ்வுகளிற்கு இறுவட்டு பயன்படுத்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

ம.பற்றிக் டிறஞ்சன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடக்கு மாகாணம்.

ம.பற்றிக் டிறஞ்சன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்